உ

பரமபதிதுணை

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

சிறுத்தொண்டநாயனர்

திவ்வியசரித்திரக்கும்மி

இஃது

மதுரை

பங்கிரிவேலுதாசரால்

இயற்றியது

மதுரை புஸ்தகவியாபாரம்

பி. நா. சி. ஏஜண்டு

மு. கிருஷ்ணபிள்ளையவர்களால்

மகமதியன் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

[இதன் விலை] 1914 [அணா 1

1140
O23:4V7 ய CN
NLG
148168

உ

பரம பதி துணை

அறுபத்துமூன்று நாயன்மார்களுள்

ஒருவராகிய

சிறுத்தொண்ட நாயனார்

திவ்விய சரித்திரக் கும்மி.

நங்நா நாநங்நா நங்நாந - நங்நா

நங்நா நாநங்நா நங்நாந -

1140
1.14

செண்பக மல்லிகைப் பூச்சொரியுந் திருச்
செங்காட் டங்குடி தன்னில்வளர்
அன்புள்ளபக்தன் சிறுதொண்டன் மீதினி
லானந்தக் கும்மிதமிட்பாட.

ஆதியிலேசிறுத் தொண்டன்செய் தர்மத்
தருளிலங்குங் கும்மிப் பாட்டுரைக்க
மேதினியோர்புகழ்ந் தேற்றும்பரங்கிரி
வேலன்கணபதி காப்பாமே.

சிறுத்தோண்டமஹா ராஜன்கதை-யிந்தச்
சீமையிலுள்ளோர் மனமகிழ
அருட் பெருங்கும்மிப் பாட்டுரைக்கத்-திரு
ஆதிசிவன்பத மே துணையே

முன்னாளில் மங்கைமின் னாள் திரு நங்கையர்
மன்னவன் செய்தர்ம மாகதையை
இன்னாளிலே கும்மிப் பாட்டுரைக்க வெள்ளை
தாமரை யாள்பதங் காப்பாமே.

வாரிதனிற்றுயி லும்பெருமான்மலர்ப்
பாதமென்னுளஞ் சிரசில்வைத்து
பார்தனிலேசிறுத் தொண்டன்மீதில் நன்றாய்ப்
பாடியேகும்மி யடியுங்கோடி.

விம்மிப்பருத்த புயத்தாளே நீங்கள்
வேடிக்கையாகவே எல்லவருங்
கும்மியடிக்கவே வாருங்கொடி நல்ல
கோதையரொன்ருகச் சேருங்கொடி.

மங்களவல்லி விசாலாட்சி-நல்ல
மாணிக்கவல்லி சுமுகவல்லி
சிங்காரமான வதனப்பெண்ணே நீங்கள்
சேயிளையெல்லோரும் வாருங்கொடி.

கச்சணிகொங்கை யழகுமுத்தே நல்ல
கன்னியே புண்ணிய மின்னரசே
உச்சிதமாகிய ரஞ்சிதமே நீங்க
ளொல்பது பெண்களும் வாருங்கொடி.

பூரணசந்த்ர வதனப்பெண்ணே யிந்த்ர
யோகப்பெண்ணே யிள வாலைப்பெண்ணே
ஆரணவல்லி யமிர்தவல்லி நீங்கள்
ஐந்தாறுபெண்களும் வாருங்கோடி

சம்ப்ரமச் செம்பொந் திறத்தாளே யிந்த்ர
சாலப்பெண்ணே அனுகூலப்பெண்ணே
இன்பசரச விலாசப்பெண்ணே நீங்கள்
ஏளேட்டுப்பெண்களும் வாருங்கோடி

சல்லாபக்காரி தனக்காரி கன
சரசக்காரி நயக்காரி
உல்லாசக்காரி ஒயில்க்காரி - நீங்கள்
ஒன்பதிரட்டிப்பெண் வாருங்கோடி

நாடகக்காரி நயக்காரி சொல்
நளினக்காரி நகைக்காரி
பாடகக்காரி பயில்க்காரி நீங்கள்
பத்திரு பெண்களும் வாருங்கோடி

வாழ்வுபெருகச் சிறுத்தொண்ட நாட்டினில்
வங்கிஷமெல்லாந் தழைத்தோங்க
நாளொன்றுக் காயிரம் பேர்தனக் கன்னம்
நடத்துங் கும்மிசொல்லக் கேளுங்கோடி. [விரு]

சே நல்விளையுந் திருவளருந்திருச்
செங்காற்றங்குடி நற்றலத்தில்
நன்னிலையாகிய மாதவத் தோரெனும்
நாதன்மறையவர்தன்குலத்தில்

வந்துதித்துப்பரஞ்சோதியா ரென்னவே
வாழ்த்திடயாவரும் நாமம்பெற்று.
அந்தணர்போற்று மனுவிதசாஸ்திரம்
ஆகமநூல்மறை யாவுங்கற்று.

சிந்தைதனிற்சதா தெய்வஞ்சிவனெனத்
தேர்ந்துமேபக்திய தாய்த்தினமும்
வந்தனையாகவே வாழ்த்தச்சிவபெரு
மானெனவே மறவாமனமும்.

சொல்லக்கேள்வியுற்ற நல்லவராகிய
சோழராஜனு மழைத்தவரை
வல்லவரென்று மகிழ்ந்து நீரென்னுட
மந்திரியாயிரு மென்றுரைத்தார்

மன்ன னுரைதவ ராமலவரந்த
மந்திரியாகவே தானிவரும்
நன்னயமாக இருந்திடவேபின்னே
ராஜனும்சண்டைக்கித் தான்வரவே.

இன்றுநான்போயந்த ராசன்தனைசெயித்
தேகிவாரேனென்று தானுரைத்து
நன்றியுடனவர் தானடந்துஇங்கே
நாடியே வந்ததோர் சேனையையும்.

சிந்தைமகிழுடன் சோழனைநோக்கியே
வந்திடும்ராசனைத் தான்செயித்து
சந்தோஷமாக அவன்பொருளையெல்லாம்
தான்கொண்டுவந்தார் சோழன்பதியே.

மன்னவன்சோழன் மனமகிழ்ந்தே நல்ல
மந்திரியையெதிர் கொண்டழைத்தே
முன்னமெனக்கடங் காமலரசாண்ட
மூர்க்கனைஎன்னமாய் நீர்ஜெயித்தீர்.

என்றுசோழமகா ராசனுரைக்கவே
எல்லாஞ்சிவன்செய லாவதல்லால்-
வென்றுவரவென்ன லாகுமோவென்றவர்
வீரபராக்கிரமஞ் சொல்லாமல்.
சிவன்செயலல்லா லிவன்செயலேதென்று
செப்பும்பரஞ்சோதி யார்தனையே
தவஞ்செய்யுமாபெரி யோரென்றறிந்தவர்
தான்சொலுவார்சோழ ராசனுந்தான்.

இத்தனைநாளெனக்கேவல்செய்தகுற்ற
மெல்லாம்பொருத்துநீர் கொண்டுவந்த
அத்தனைகோடி பணத்தையும் நீரெடுத்
தன்புடனுங்களூர் சேருமென்று.

விருப்பமுடன் சோழ ராஜனுரைத்துப்பின்
வேணதிரவிய முங்கொடுத்து
அருட்பெருகுந்திருச் செங்காட்டூரினி
லன்னதானஞ்செய் திருமெனவே.

எண்ணியேராஜன் விடைகொடுக்கத்தொண்ட
ரீசன்செயலென வேமகிழ்ந்து
புண்ணியவான்சிறுத் தொண்டரிவரெனப்
பூசுரன்போல்வாழ்ந் திருக்கலுற்றார்.

பத்தினியாளுடன் சந்தண நங்கையும்
பாங்கியும்வாழ்ந்து வரும்போது
புத்திரன்பிரக்கச் சீராளனென்றுமே
புண்ணியவானுக்கு பேருமிட்டார்

பூலோகதர்ம பரிபாலனுமந்தப்
புண்ணியவான்சிறுத் தொண்டருந்தான்
யாவுடன்நெய்தயி ரன்னங்களும்-பர
தேசிகள்சாப்பிட் டிளைப்பார

ஆணிப்பொன்னாற்செய்த கோபுரமண்டபம்
அந்தணர்வாழ்தெரு வீதிகளும்
மாணிக்கரத்தின வயிரமிழைத்திட்ட
மாளிகையில்பிரக்ஞ்யாதிகளும். [உக]

முத்துச்சரங்கள் பவழங்கோமேதக
மொய்த்திருக்குஞ் சித்திரகூடங்களும்
சற்றும்விலைமதிக் காதமரகதத்
தாற்செய் திடுங்கன்னி மாடங்களும்

சந்திரகாந்தக்கல் லாலேயமைத்திட்ட
சுந்தரமாகிய மேடைகளும்
விந்தையதாகவே கந்தபரிமளம்
வீசுகின்றதென்றல்வாடைகளும்

அன்னக்கொடிகட்டுஞ் சத்திரமும்வெகு
ஆண்டிகட்கன்னம் படைக்கவென்று
பன்னகசாலையும் நந்தவனங்களும்
பற்பலவாவியு முண்டுபண்ணி,

பாலனைப்பள்ளியி லேகவைத்தாரிவர்
பைங்கிளி யைச்சாதம் பொங்கவைத்தார்
வேலையில்லாதன்ன நந் தான்கொடுத்தார்மிக்க
வேலைமிகவு முடித்துவைத்தார்.

செப்பமதாகச் சிறுத்தொண்ட நாட்டினிற்
செயக்கண்டிசங்குகள் தான்முழங்கத்
தப்பிதம்வாரும லன்னங்கொடுத்தவர்
தாரணியெங்குஞ் செலுத்துகையில்.

அப்படியாக்கொத்த பக்தனைச்சோதிக்க
வன்னாழிலாதி பரமசிவன்
எப்படிசோதிக்க லாமெனவேஎண்ணி
யேகப்பைரவர் வேடங்கொண்டு.

விரித்தசடையும் புலித்தோலும்வீர
வெண்டையங்காலி லணிந்துகையில்
பருத்ததெண்டுந் திருப்புத்தகங்கொண்டு
பாதைவழியே நடந்துவர.

பன்னகம்பூணும் பரமசிவனந்தப்
பக்தன் நினைவை யறியவென்று
அன்னமென்றொருவர் வாரமவன்று
அழுதுகளுஞ்செல வில்லாமல். [கூஎ]

ஏகபராபர லோகமுண்டாக்கிய
ஈஸ்பரனுமொரு விந்தையதாய்
மாய்கையாயன்றைக்கி வூரிர்பரதேசி
வழியிலுங் காணமற் செய்தனரே.

இந்தவிதமாக ஈசன்செய்யத்தொண்ட
ரில்லில்நடக்கிற செய்தியைகேள்
சந்தண நங்கையே சாதங்கறிவகை
சல்தியதாகச் சமையுமென்றார்

என்றைக்கு மன்னஞ் சமைக்கிர தில்மிக
இன்பமதாகச் சமைத்துவைத்து
தன்றெண்க்காரியம் பார்த்திருந்தாரப்பால்
நாயகியாளுமங் கோடிவந்து

அன்னங்கறிகள் சமைத்தாச்சு இங்கே
ஆண்டிகளின்னம் வரக்காணோம்
மன்னவரே பர தேசிகளைக் கண்டு
வாகாயழைத்துமே வாருமென்றாள்

பைங்கிளிசொன்ன மொழிகேட்டுப்பர
தேசிவரும்பாதை தன்னில்வந்து
எங்கெங்குந்தேடியுங் காணமலவர்
மங்கையர்தன்னிடம் வந்துசொல்வார்.

ஏது தவக்குறை செய்தோமோ பெண்ணே
இன்றைக்கோராண்டியுங்காணோமே
பாதைதெருத்திண்ணை வீதியில்மேயோர்
பண்டாரந்தன்னையுங் காணோதடி

ஆண்டியையிங்கு அடித்தோமோபெண்ணே
அன்ன மளிக்கா தசந்தோமோ
வேண்டியஆண்டி நிதம்வருவாரடி
மெல்லியரே திருநங்கையரே.

என்னதவக்குறை செய்தோமென்றாரப்போ
தங்கு திருநங்கை யேதுசொல்வாள்
மன்னவரே யென்மணவாளா நம்
மனதில்வருங்குற்ற மொன்றுமில்லை

[சசு]

ஈஸ்பரன்சோதனைக்கென்ன செய்வோமிதற்
கெப்படியாகிலும் நீரேகி
வாஸ்தவமாகவே தானடந்துஇப்போ
டின்னவாஆண்டியைக் கூட்டிவாரும்

என்றுந்திருநங்கை தானுரைக்கச்சிறு
தொண்டருங்கேட்டு மனமகிழ்ந்து
மன்றலர்பூணு மணிமார்பன்சிறுத்
தொண்டனும் ஆண்டியைத்தேடலுற்றார்

சீராளனபள்ளியிற் றூனிருக்கத்திரு
நங்கையுஞ்சத்திரம் வீற்றிருக்கப்
பாராளுந் தொண்டன் பதியெல்லாந்தேடிய
பரமசிவன்கதை கேளுங்கொடி

பரமசிவன்பர தேசியைப்போலொரு
பைரவரூபம் வடிவெடுத்து
ஹரஹரவென்றசொல் தப்பாமல்வெகு
அன்பாய்தள்ளாடி புகழ்ந்தவரும்.

வேகமாய்த்தானும் வழிகூடிவிளை
யாடுங்குழந்தையைத் தான்பார்த்து
தாகமதாகவே வந்துநின்றுசிறு
தம்பியரேஇந்தப் பட்டணத்தில்

சீராருந்தம்பி சிறுப்பிள்ளைகாள்சிறுத்
தொண்டன்மடமெங்கே செப்புமென்றார்
வாருமையா பரதேசியரேயந்த
மடத்தினிலன்னக் கொடிபரக்கும்

அல்லும்பகலுமே ஆண்டிகளைத்தேடி
அன்னமும்பாலுமே தான்தருவார்
செல்லுமய்யாமடந் தான்தேடிச்சிறுத்
தொண்டனுமங்கே யிருப்பார்காண்

என்றுசிறுவருரைத்திடவேசிறுத்
தொண்டன்மடந்தேடித் தானடந்தார்
மன்றில்நடம்புரி யுஞ்சிவனாரும்
மடந்தனைத்தேடியே போம்பொழுது. [௫௫]

திருச்செங்காற்றங் குடித்தெரு வீதியிற்
சேகண்டி சங்குச் சத்தமுழங்க
அருட்பெருமன்ன மடத்தில்வந்து தின
றன்பாயமுது படையுமென்றார்

அடர்த்தசங்கு முழங்கிடவே அந்த
ஆண்டியுமன்னந் தரச்சொல்லவே
மடத்திலுள்ள திருநங்கை யாளுமே
வந்துபரதேசியைப் பணிந்து.

அன்னமும்பால்பதி னெட்டுவகைக்கறி
யான்படைப்பேன் பசியாருமென்று
பன்னமெடுத்து விரித்திடும்போதேயப்
பரதேசியன்போடுசொல்லலுற்றார்.

அன்னம்படைக்கிறே னென்றுசொன்னாயுனக்
கன்புள்ளமன்னவ னெங்கேயென்றார்
தன்மையதாகச் சிவன்கேட்க அப்போ
தான்சொலுவாள் திருநங்கையுந்தான்

என்னாளும்ஆயிரம் பேர்தனக்கன்னம்
இடைவிடாதிங்கே கொடுத்துவந்தோம்
இன்னொருவ ரிவடம்வரவில்லை
என்றடியார்களைத் தேடலுற்றார்,

என்றுதிருநங்கை சொல்லிடவேயதற்
கேதுசொல்வார்பர தேசியாரும்
ஒன்றுமறியா துரைத்தாயேநல்ல
உத்தமியேதிரு நங்கையரே

சொன்னசொல்தப்பாத பைங்கிளியேதாயே
சோறுபடைக்கிறே னென்றுசொன்னாய்
மன்னவனில்லா மனைதனிலேசாதம்
மங்கையேநானும் பொசிப்பதில்லை

சித்தமாயன்னம் பொசிப்பதற்குத் திரு
வாத்தியடியிலே வீற்றிருப்பேன்
உத்தமியேயுன் கணவன்வந்தாலங்கே
யோடிவரச் சொல்லுமென்றுரைத்து

நேத்தியதாக வுரைத்துவிட்டு-நீயிஷ
நேரமதற்குள்ளே தானேகி
ஆத்திமரந்தனில்வீற்றிருந்தாரெங்க
ளாதிபரம சிவயோகி

OFFICE OF THE REGISTRAR
31 MAR 1914
MADRAS.

பக்தன்சிறுத் தொண்டராஜனுந்தானேகி
பரதேசியை யெங்குந் தான் தேடி
சத்திரந்தன்னிலே வந்துநின்றுதொண்டர்
தையல்நல்லாளுடன் சொல்லலுற்றார்

இத்தனைநேரம்நான் தேடிவந்தேன்-பர
தேசிகளெங்கினுங் காணுமெனஞர்
பத்தாவின்பாதம் வணங்கிநின்று அந்த
பைங்கிளியாள்திரு நங்கைசொல்வாள்

வாருமெனது மணவாளசாமி
வையகதர்ம பரிபாலார்
ஆரோபெரிய பரதேசியன்பாய்
அன்னம்படையம்மா வென்றுசொன்னார்

அன்னம்படைக்கிறேன் சாப்பிடுமென்றதற்
கன்பாய்மணவாள ரெங்கேயென்றார்
அன்னம்போசிக்கவே ஆண்டிகளைத்தேடி
யழைத்துவரப்போனு றென்றுசொன்னேன்.

பத்தாவில்லாத மனைதனிலேபர
தேசிகளன்னம் போசிப்பதில்லை
உத்தமியேயுன் கணவன்வந்த வுடன்
ஓடியேதான்வரச் சொல்லுமென்று.

சித்தமகிழ்ந்து சிவயோகிதிரு
வாத்தியடியி லிருப்போமென்றார்
உத்தமரே நீ ரழைத்துவாருமென்
றுகந்துதிரு நங்கை தானுரைத்தாள்.

இந்தவிதந்திரு நங்கைசொல்லச்சிறுத்
தொண்டனுங் கேட்டுமனது நொந்து
சிந்தைமகிழ்ந்து சிறுத்தொண்டருந் திரு
நங்கையைப் பார்த்தவ றேதுரைப்பார். [௧௫]

எங்கெங்குந் தேடியே தான்திரிந்தேன்-பர
தேசியொருவரைக் காண்கிலேனே
திங்கள் முகத்தாளே பெண்ணரசே-தெரு
வெங்கும் ஒருவரைக் காண்கிலேனே

தேசமதெல்லாம் திரிந்தலைந்தே ஞெரு
சித்தரை யெங்கினும் காணேனே
வாசலில் வந்திடும் ஆண்டியை விட்டுநீ
வாகா யுரைப்பதேன் வஞ்சியரே

என்று சிறுத்தொண்ட ராஜனுரைக்கவே
ஏந்திழையும்பின்பு ஏதுசொல்வாள்
இன்றுநீர் சொன்னது மெய்வசன மிப்போ
ஈசன்செயல்தனை யாரறிவார்

வாருங்கள் எந்தன் மணவாளா-சுவாமி
மன்னர்கள் மெச்சும் குணசீலா
யாருந்திருவாத்தி தன்னிலேதான்-பர
தேசியும் பள்ளிகொண் டேயிருப்பார்

திட்டமுடனே அழைத்துவாருமென்று
செப்பினளேதிரு தங்கையுந்தான்
சட்டதிட்டமுடன் தான்தேடிகண்டு
சன்னாசிபாதம் நமஸ்கரித்து.

சாஸ்திரவேதமறிந்தசிறுத்தொண்டன்
சன்னாசிபாதம் பணிந்துநிற்க
பார்த்திருகண்கள் களிகூர்ந்துஅந்த
பண்டாரயோகியு மேதுசொல்வார்.

கும்பிடுங்காரிய மெந்தனிடத்திலே
கூறுவாய் நீரெனக்கிப்போது
அன்புடனென்னை யழைத்தவகைதனை
யானறியச்சொல்லுமென் றுரைக்க.

சாதம்புசிக்க வரவேணுஞ்சுவாமி
சன்னாசியாரேதவமுனியே
நீதமாய்ச்சொல்லிய தொண்டனைப்பார்த்தவர்
நிச்சயமாக உரைக்கலுற்றார் [எள]

அன்னம்புசிக்க எனையழைத்தாய் பத்தா
ஆனாலுமென்ன கறிபடைப்பாய்
என்னகறிவகை கேட்டாலுஞ்சுவாமீ
என்னாலேதான்தர ஆகுமையா.

என்றுசிறுதொண்டன் சொல்லிடவேஅதற்
கேதுசொல்வார்தவ மாமுனியும்
இன்று நீரென் மனம் போலேதருகிறே
னென்றுசொன்னாய்சிறுத் தொண்டனே நீ

கேட்டகறிவகை தாரீரேமென்றாய்கிளை
கோத்திரந்தன்னி லுயர்ந்தபிள்ளை
தாஷ்டிகவானா யிருக்கவேணுமிகச்
சாஸ்திரங்கற்ற சிறுவனுமாய்

ஒருத்திக் கொரு மகனாகவேணும்-உடல்
ஒச்ச மில்லாம லிருக்க வேண்டும்
தருமந்தபவுபொருமையுடைய
சமர்த்துள்ள பிள்ளையாய்த் தான்வேணும்

தாய்தன்மடியினிற் சேயிருக்க- ஈன்ற
தந்தையும் வாளாற் கழுத்தருக்க
தோய்தலில்லாமலே ஓர்மனதாய் நீயுஞ்
செய்துவைத்தாலமு துண்டிடுவேன்.

என்றுசிவயோகி தானுரைக்கச்சிறுத்
தொண்டனுங்கேட்டு மனமகிழ்ந்து
நன்றதுதானெந்த னய்யாவேஇப்போ
நாதனேகேட்ட கறிவகையும்

வேகமுடன்சமைத் தோடிவருகிறேன்
வீற்றிருமிந்த மரத்தினிலே
வாகுடனேசிறுத்தொண்டனுமப்போது
மாவேகமாகவே தான்வரவே,

மன்னவரே என் னுயிர்க்குயிரான
மணவாளா ஆண்டியை எங்கேயென்றாள்
அன்னேரமே சிறுத்தொண்டனுமப்போது
அன்பாய்மனையாளுக்கேதுரைப்பார் அறு]

செம்பவழத்திரு வாயழகிதிரு
நங்கையரே சிவயோகியுந்தான்
அன்புள்ளபாலன்றனையறுத்துக்கறி
யாக்கினாலன்னம் புசிப்பமென்றார்.

நல்லதெனச்சொல்லி நானும்வந்தேனெந்தன்
நாயகியுன்மன தெப்படியோ
சொல்லுக்குப்பேதகம் வாராமல்க்கறி
சுருக்காயாக்கணும் பெண்மயிலே

வந்தபரதேசி போகுமுன்னேஎன்
மனைவியேஆண்டிக் கிசைந்தகறி
விந்தையுடனே சமைக்கவேணுமென்று
மெல்லிநல்லாளுடன் றானுரைத்து

பாண்டிசேரன்சோழன் நாட்டினிலேநல்ல
பாலகன்பார்த்துநான் வாங்கிவர
ஆண்டிக்கிசைந்த குழந்தைவாங்கப்பெண்ணே
ஆயிரம்பொன்தருமெனறுரைத்தார்.

மண்டலதர்ம பரிபாலர்மகா
ராசன்சிறுத்தொண்டன் றானுரைக்க
வண்டலர்பூங்குழல் தங்கையருமந்த
மன்னன்முகம்பார்த்து எதுரைப்பாள்

தோட்டத்தில்காய்கறி தானிருக்கசுவாமி
தூரத்தில்காய்கறி தேடுவதேன்
வாட்டமில்லாமல் சமைத்துவைத்தால்கறி
வைத்தவர்கல்லோ பலன்கிடைக்கும்

நம்மிடபிள்ளை தலையறுத்துஇப்போ
நாமேகறிகள் சமைத்துவைத்தால்
வம்மிசமுவேழ் தலைமுறைக்குந்திரு
மங்கைபாகனருகிலே பதங்கிடைக்கும்

என்றுதிருநங்கை தானுரைக்கதொண்ட
றேகவேபள்ளிக் கூடந்தனிலே
அன்றுசிறாளனுஞ் சொற்பனங்கண்டதாய்
ஐயரிடந்தனிற் சொல்லுகிறான், [கூங]

வாத்தியாரய்யரே இப்போதுஒரு
மாய்கைக்கனாகண்டேனென்று சொல்ல
சாஸ்திரம்ஓதிடும் வாத்தியாரப்போது
சாற்றுவார் பாலகனைப்பார்த்து.

சீமைசெழிக்கக் கினாக்கண்டாயோ தம்பி
செங்கோல்தழைக்கக் கினாக்கண்டாயோ
தாமதமில்லாமல் மாதம்மும்மாரி
தளைத்துமழைபெய்யக்கண்டாயோ

என்னதான்சொற்பனங் கண்டாயடா தம்பி
ஏதுக்கேங்கி நீயுமழுகிறாய்
சொன்னசொல்தப்பாத பாலகனுங்கண்ணீர்
சோரவிட்டேயவன் சொல்லலுற்றான்

சீமைசெழிக்கவும் நான்காணேனையா
செங்கோல் தழைக்கவும்நான்காணேன்
பூமியிலேயெனை யீன்றதோர்தந்தையும்
போந்துகழுத்தை யறுக்கக்கண்டேன்

இப்படியாய்ப்பாலன் சொல்லிடவே அதற்
கேதுரைப்பாரந்த வாத்தியாரும்
அப்படியல்லடா தம்பியரே நான்
அயனார்விதிப்படி தப்பாது

சொற்பனங்கண்டவர்க் கொன்றுமில்லையென்று
சொல்லிவாய் வாத்தியார் மூடுமுன்னே
செப்பமதாகச் சிறுத்தொண்டராசனும்
சீராளனைத்தேடி வந்திடவே

பாலன்கினாவும் பலியாதுசிறு
பையனுங் கல்வியி லேநினைவாம்
காலன்றனையுதைத் தானருள் காணுவாய்
கண்மணி யன்னம்புசித்துவாடா

தகப்பனைக்கண்டந்தச் சீராளனங்கே
தாவியேவாத்தியார் பின்னொளிந்தான்
விகற்பமில்லாமற் சிறுத்தொண்டராசனும்
விளம்புவானதனனிடமைந்தனிடம்

மைந்தனேவாடயிங்கே துரையேயெந்தன்
மாசில்லாதமுத்தே மரகதமே
தந்தைமாதாகுரு வார்த்தையைத்தள்ளாதே
தனையனேசீக்கிரம் நீவாடா

உந்தனைப் பத்துமா தஞ்சுமந்துபெற்ற
ளோடுசகோதர னாகியவுன்
சொந்ததாய்மாமனு முந்தனைப்பார்த்திட
வந்து நம் வீட்டிலிருப்பதினால்

அம்மானுமுந்தனைப் பார்ப்பதற்காக
வழைத்துவரச்சொன்ன ரானதினால்
சும்மா நீவாயெந்தன் ரத்தினமேயெனச்
சொல்லவும் வாத்தியாரப்போது

சீக்கிரம்சாப்பிட்டு வாருமெனச்சொல்லி
சீராளன்தன்னை யனுப்பிவைத்தார்
பாககியமென்றந்தப் பாலகனுங்குரு
பாதம்பணிந்து நமஸ்கரித்து

ஆதரவாக வருகையிலேபெற்ற
அன்னையைப்பார்த்தவ னேதுரைப்பான்
மாதவஞ்செய்து யென்னைபெற்றதாயேயென்
மாமனெங்கே யெனக்கேட்க

இன்னேரம்அவ ரிங்கிருந்தா ரிப்போ
தெழுந்துபோயினர் வந்திடுவார்
உன்னைவந்தாலிங் கிருக்கச்சொல்லியப்பா
உன்மாமன்போன ரெனவுரைத்தார்

இப்படிச்சொல்லி மடத்தினில்மூவ
ரிருக்கையில்வெண்காட்டு நங்கையுந்தான்
செப்பமுடனேதான் பாலனுக்குளண்ணை
தேய்த்துமேசீயக்காய் தானரைத்து

தலைமுழுக்காட்டியே ஈரந்துடைத்தந்த
தம்பிசீராள னுந் தூங்குதற்கு
சிலைநுதல்வேல்விழி மங்கையருமப்போ
சேயனைவாரியே முத்தமிட்டு

தங்கத்தா லூஞ்சலிற் தான்போட்டு அந்த
தையல்திரு நங்கை தாலாட்ட
திங்கள்முகத்தானே கண் ணுரங்காயென்று
நங்கையுமப்போது தாலாட்ட

ராரிராரோவென்று தாலாட்டிஎந்தன்
நற்கனிபொற்குயில் ராரிரர்ரோ
பாரினில்தர்மவான் பெற்றகண்ணேயெந்தன்
பாலகாசீராளா கண் ணுரங்காய்

என்று திருநங் கைதாலாட்ட அவ
னேகாந்த மாகவேகண்மூடி
இன்னோரதிசய முண்டோசிவன்செய
லெப்படியாகுமோவென் றுணர்ந்து.

பொய்யுறக்கங்கொண்டு சீராளனந்தப்
பொன் னூஞ்சல்மீதிற் படுத்திருக்க
மெய்யுறக்கமென நங்கையருமவன்
மேனியசையாம லேதூக்கி

தூக்கியமைந்தனைத் தன்துடையில்வைத்து
தோகைதிருநங்கை கைபிடிக்கச்
சிக்கிரங்கத்திடைய தானெடுத்துகொண்டு
சீராளன்றந்தையுமப்போது

சந்தணநங்கை தலைபிடிக்க-அந்த
தையல்திருநங்கை கால்பிடிக்க
சுந்தரன்றன்னை மனதிலெண் ணிச்-சிறுத்
தொண்டனுங் கத்தியைத் தான்பிடித்து.

கழுத்தையறுத்துத் திருநங்கைதன்னிடங்
கார்வலன்றானுங் கொடுத்திடவே
அழுத்தமுடனே அறுத்ததலைதனை
அப்புரம்வையன்று தானுரைத்தார்

மடக்கொடிசந்தண நங்கையுமப்போது
மைந்தன்தலையை யெடுத்துவைத்து
உடற்கரி தன்னையும் பாகமதாக
ஒருநொடிதன்னிற் சமைத்துவைத்து

செவ்வையதாக யெலும்பைக்கறிசெய்து
திவ்வியமான ரசங்கள்வைத்து
ஒவ்வோர்கறிகளுந் துண்டுதுண்டாகவே
ஒண்டொடியாளுஞ் சமைத்தபின்பு

இன்பமுடன் திரு நங்கையுமப்போது
ஏகியேதொண்ட ரிடந்தனிலே
அன்பருக்கான கறிகளெல்லாஞ்சமைத்
தாச்சுதுஆண்டியை கூப்பிடுங்கள்

என்றுதிருநங்கை சொல்லிடவே அதற்
கின்பம்பெருகிய தொண்டருந்தான்
இன்றுபோய்க்கூட்டி வருகிறேனென்று
எழுந்துபரமனைத் தானினைந்து

காத்திருப்பாரெனத் தானறிந்துதொண்டர்
கடுகநடந்தோடி யன்புடனே
ஆத்திமரத்திலே வீற்றிருக்கின்றதோ
ராண்டியைக்கண்டு நமஸ்கரித்து

வந்து அமுது போசித்தருளுமையா
மாமுனியேபர தேசியரே
இந்தாவந்தேனெனச் சொல்லியேயவ
ரெழுந்துதள்ளாடி நடந்துவந்தார்

மண்டலதர்ம பரிபாலனபின்னே
வந்தார்பரம சிவனாரும்
கண்டுதிருநங்கை தானெழுந்துவந்து
காலில்விழுந்து நமஸ்கரித்து

தங்கத்தால்செம்பில் சேலமோர்ந்துவந்து
தையல்திருநங்கை தான்கொடுக்க
இங்கிதமாகவே செம்புஜெலத்தையும்
ஈஸ்பரர்க்குத்தொண்டன் கால்கழுவி

வந்துபரமன் மடத்திருக்க-வப்போ
மங்கைதிருநங்கை தானோடி
சந்தனநங்கையைத் தானழைக்கஅவள்
சாதத்தைதட்டிலே தானெடுத்து

வாழையிலைதனைத் தான்விரித்துஅந்த
மங்கைதிருநங்கை சொல்படிக்கி
வேளையிற்சந்தன நங்கையுஞ்சாதத்தை
மெல்லிநல்லாள் கையிற் ருன்கொடுக்க

வாரியேசோறு கறிபடைத்தாளந்த
மங்கைதிருநங்கை கையாலே
சாரியதாகவே புத்துருக்குநெய்யுந்
தாரைவிட்டோடவே வார்த்துநின்ருள்

பத்தன்சிறுத்தொண்டனைப் பார்த்துப்பர
தேசியுமப்போது ஏதுசொல்வார்
சித்தப்படிக்கிக் கறிசமைத்தாயிப்போ
செய்ததுஞாயஞ் சரிதானே

உடற்கறிவைத்ததே யல்லாதுபின்
தலைக்கறியில்லையே தொண்டனேபார்
நடக்கையுனக்கிது ஞாயமோ சொல்லென
நாயனுருந்திரு நங்கைதன்னை

திங்கள்முகத்தாளே பெண்ணரசேதலை
எங்கேயென்று தானுங்கேட்டிடவே
மங்களமாகச் சீராளன்தலைதன்னை
மாதுஞ்சமைத்துக் கறிபடைத்தாள்

சித்தர்மகிழ்ந்து அருள்புரிந்துதிரு
நங்கைமனதின் குறிப்பறிந்து
இத்தலந்தன்னிலே இப்படிச்செய்பவர்
எங்கினும்எப்போதுங் கண்டதில்லை

என்றுவாருஞ்சிறுத்தொண்டரே இப்போ
திருந்துஅமுதுண்ண வோர்குழந்தை
சென்றுஅழையுமென் றேயுரைக்கச்சிறு
தொண்டனுமப்போது சொல்லுகிருர்

ஈஸ்பரன்தந்தது ஓர்குழந்தையதை
இப்போதுமக்குக்கறியாக
காசினியெங்குந் தழைத்தோங்கக் கயி
லாசர் கிருபை யதனுலே ௩௩௩

கொண்டுவந்துகறி தான்சமைத்தேனென்
குலக்கொழுந்தாகிய பாலகனை
கண்டிருந்தும் பாலன் வேணுமென்று லெந்தன்
கர்த்தாவே யென்செய்வே னென்றுசொல்லி

தாராளமாக நமஸ்கரிக்கச்சித்தர்
சந்தோஷமாய்த் திருவாக்குரைப்பார்
பாராளும்பாலகன் பேரைச்சொல்லி நீயும்
பாதையிலே நின்று தானழையும்

என்றுசிறுத்தொண்டனுக் குரைக்க அப்போ
ஈஸ்பரன்றன்னை நமஸ்கரித்து
சென்றுசீராளனைத் தானழைக்கச்சிறுத்
தொண்டனுமப்புறந் தானேகி

மூச்சந்திவீதியில் தொண்டரழைக்கவே
மூன்னாகச் சீராளனோடிவந்து
அச்சமில்லாமலே பாலகனுமப்போ
அய்யாயிதோவந்தே னென்றுரைத்தான்

வந்ததோர்பாலனைக் கூட்டிக்கொண்டேயந்த
மாமுனிவரிடம் வாருமென்று
சந்தோஷமாகிச்சிறுத் தொண்டனும்வரச்
சன்னாசியாரு மறைந்துவிட்டார்

சித்தைகலங்கி மெலிந்துடல்வாடியே
செப்புவாரேசிறுத்தொண்டருந்தான்
வந்ததோராண்டிமா தேவனல்லால்வேறு
மாமுனியில்லையென் றேநினைந்து

சந்திரசேகரனே சரணஞ்சிவ
சங்கரனே சரணஞ்சரணம்
இந்தவேளையினில் வநதுரெட்சித்துநீ
ரெங்களைக்காப்பாற்ற வேணுமென்று

மைந்தன்சிறுத்தொண்ட னுந்திருநங்கையும்
பாங்காய் தியானித்திருக்கவப்போ
சித்தமகிழ்ந்து சிவனருமுத்தி
சீக்கிரந்தான்தர வேணுமென்று

சீருடன்ரிஷப வாகனமீதேறி
பார்வதியோடுமே வந்துநின்று
வாருங்காணுஞ்சிறுத் தொண்டனேஉன்னைப்போல்
வையகந்தன்னிலே நான்காணேன்

என்றுபரம சிவனுரைக்கஅதற்
கேந்திழையாளும் சிறுத்தொண்டனும்
அன்றுஅரனடி தான்பணிந்துஇவ
ரன்பாகத்தோத்திரஞ் செய்யலுற்றார்

அம்பிகைபாகனேஓம் சரணம்யென்னை
ஆண்டவனேசர ணஞ்சரணம்
சம்போசதாசிவ னேசரணஞ்சச்சி
தானந்த னேசர ணஞ்சரணம்

அரிஅயன்தேடியுங் காணுதளந்த
னய்யனேஉந்தன் பாதஞ்சரணம்
சிறியேனைக்காத்து ரெட்சித்தருளுஞ்செக
தீஸபரனே சரணஞ்சரணம்

இப்படியாக இவர்கள் துதித்திட
ஈஸபரனுருடமாய்கையினல்
செப்பும்விமானம் ஒன்றப்போவரச்செய்து
சிறுத்தொண்டர்க்குந்திரு நங்கையர்க்கும்

பாலகனுன சீராளனுக்கும்இவர்
பாங்கியர்சந்தன நங்கையர்க்கும்
சாலோகசாமீப சாரூபமேலான
சாயுச்சியமென்ற பதங்கொடுத்து

மங்களமாக இன்னாள்வரையுங்கைலை
வாகுடன்சேர்த்துமகிழ்வாக
திங்களணிந்திடும் ஈஸவரருஞ்செக
தீஸவரியு மொன்ருய் வீற்றிருந்தார்

யாவரும் பாடிக்கோண் டாடிப்புகழ்பெற
வாகுஞ் சிறுத்தொண்டன் கும்மியிதை
மூவருந்தேவரும் மாமுனிவோர்களும்
மூஷிக னேமுன்னே னுனதிஞல்

ஆதியுமந்தமு ந்தன்னுனே தன
தானந்தவா ழ்க்கையும் தன்னுனே
பாதிமதியணி நாதன்றிருவருள்
பார்வதி தேவியுந் தன்னுனே

தந்தைதாயானவன் றன்னுனே தன
தன்னுனேதன தன்னுனே
சிந்தைமகிந்தவன் றன்னுனே ஜர்வ
ஜீவ தயாபரன் றன்னுனே

இந்தவுலகிலிறப்பு பிறப்புக
ளெல்லா மவன்செய்கை யாலெனவே
வந்தவினைப்பய னைத்தவிர்க்கவடி
வேலன்முன் னேனே குருசுவாமி

சென்னை யிராஜதா னிக்குள் ளடங்கிய
ஜில்லாமதுரை டவுனில்வளர்
நன்னயன் எஸ் அய்யா சாமிபிள்ளையிந்த
நாட்டினிற் றேர்கும்மிப் பாட்டினிலே

பெரியஅக்ஷரத் தாலச்சில் நீடித்துப்
பார்த்துக் கும்மி படிப்பதற்கு
வுரியதாகு மெனத்துலக்கி நன்று
யோர்ந்து மெச்சின ரச்சிலிட்டார்

பத்தன்சிறுத்தொண்டனின்கதையைக் கும்மி
பாரில்ப் படிப்போருக் கும்வாழி
சித்தமகிழ்ந்திச் சரிதையைக்கேட்டிடுந்
தேவிமார்வாழத்தினம்வாழி

நன்மையதான சிறுத்தொண்டன் கும்மியை
நாடியேபார்த்து மனமகிழ்ந்து
தன்மையுடனிதை அச்சிலிட் டாருமேற்
றலம்பெற்று வாழவும் வாழியதே

கடுிள்

சிறுத்தொண்டநாயனர்
திவ்விய சரித்திரக்கும்மி
முற்றிற்று.

468